T1-புவியியல்

மாதிரி வினாத்தாள் II

9th Standard

**சமூக அறிவியல்**

Reg.No. :

# I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

Time : 02:45:00 Hrs

Total Marks : 90

## பகுதி - அ

15 x 1 = 15

1) இந்திய மாநிலங்களில் பரப்பளவில் தமிழ்நாடு ______ இடத்தை வகிக்கிறது
   (a) 5ஆவது (b) 7ஆவது (c) 9ஆவது (d) 11ஆவது
2) தமிழ் நாட்டில் _____ மாவட்டம் கிழக்குக் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது.
   (a) நீலகிரி (b) தேனி (c) நாகப்பட்டினம் (d) கோவை
3) இந்தியாவின் மொத்தப் பரப்பளவில் தமிழ்நாட்டின் பரப்பு ______ ஆகும்
   (a) 4% (b) 5% (c) 3% (d) 2%
4) கிழக்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள குன்று _______ ஆகும்.
   (a) நீலகிரி (b) கல்வராயன் மலை (c) ஏலமலை (d) பழனிமலை
5) சிற்றாறு _____ ஆற்றின் முக்கிய துணையாறு ஆகும்.
   (a) காவிரி (b) தாமிரவருணி (c) வைகை (d) பாலாறு
6) நொய்யலும் அமராவதியும் ______ ஆற்றின் துணையாறுகள் ஆகும்.
   (a) வைகை (b) காவிரி (c) பாலாறு (d) பெரியாறு
7) அயன மண்டலச் சூறாவளி உருவாகும் மாதம் ___________ ஆகும்.
   (a) நவம்பர் (b) ஜனவரி (c) டிசம்பர் (d) ஏப்ரல்
8) தென்மேற்குப் பருவக்காற்று மழைப்பொழிவின் போது தமிழ் நாடு பெரும் மழையின் அளவு ___________.
   (a) மிக அதிகம் (b) குறைவு (c) சராசரி (d) அதிகம்
9) சதுப்பு நிலக்காடுகள் காணப்படுகின்ற இடம்
   (a) வேதாரண்யம் (b) கோயம்புத்தூர் (c) புதுக்கோட்டை (d) நீலகிரி
10) பின்வருவனவற்றுள் எது மண் உருவாவதற்கு காரணியாக அமைவதில்லை?
   (a) காலம் (b) மண் நிலை (c) உயிரினப் பொருட்களின் சேர்க்கை (d) உயிரில்லாப் பொருட்களின் சேர்க்கை
11) _____________ மண் அடுக்கின் கனத்தை தீர்மானிக்கின்றது.
   (a) கால நிலை (b) நேரம் (c) நிலத்தோற்றம் (d) காற்று
12) லிக்னைட் உற்பத்தியில் முதன்மையான இடத்தில் இருப்பது ____________ ஆகும்.
   (a) விழுப்புரம் (b) நெய்வேலி (c) சென்னை (d) ஈரோடு
13) தேயிலை, காப்பி, ரப்பர், மிளகு மற்றும் முந்திரி போன்றவை தமிழ்நாட்டில் வளரும் _________ பயிராகும்.
   (a) உணவு (b) இழை (c) தோட்டப்பயிர் (d) மற்ற பயிர்
14) ________ பயிரை மானாவாரிப் பயிர் என்று தமிழ்நாட்டில் கூறுவர்
   (a) நன்செய் (b) புன்செய் (c) கால்வாய் விவசாயம் (d) துல்லிய விவசாயம்
15) தமிழ்நாட்டின் நெல் ஆராய்ச்சி மையம் _________ ல் உள்ளது
   (a) ஆடுதுறை (b) கடலூர் (c) நெய்வேலி (d) சென்னை

## பகுதி - ஆ

10 x 3 = 30

16) தமிழ் நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளை எழுதுக
17) தமிழ் நாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நான்கு மாவட்டங்களின் பெயர்களை எழுதுக.
18) தமிழ் நாட்டின் முக்கியமான ஆறுகளை எழுதுக.
19) மெரினா கடற்கரையைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
20) தமிழ்நாட்டின் பருவங்களை வரையறு.
21) தென்மேற்குப் பருவக்காற்று மழையால் தமிழ் நாட்டின் கிழக்குக் கடலோரப்பகுதியில் மழை பொழிவதில்லை-காரணம் கூறு.
22) மண் உருவாவதைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
23) மரபு சார்ந்த சக்தி வளங்கள் மற்றும் மரபு சாரா சக்தி வளங்களின் வேறுபாட்டை எழுதுக.
24) விவசாயத்தைக் கட்டுப்படுத்தும் காரணிகள் யாவை?
25) ஆழ்கடல் மீன்பிடித்தல் உள்நாட்டு மீன்பிடித்தல் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுக.

## பகுதி - இ

5 x 5 = 25

26) தமிழ் நாட்டின் வரலாற்றை தொகுத்து எழுது.
27) தமிழ் நாட்டின் ஆறுகளை குறித்து ஒரு நீண்ட விளக்கம் கூறுக
28) தமிழ்நாட்டின் மழைப் பொழிவின் பரவலை எழுதுக.
29) தமிழ் நாட்டின் கனிம வழங்களைத் தொகுத்து எழுதுக.
30) வேளாண்துறை மாறி வரும் போக்கினைப் படம் பிடித்துக் காட்டுக

## பகுதி - ஈ

2 x 10 = 20

31) தமிழ் நாட்டின் வரைபடத்தில் பின்வருவனவற்றை குறிக்கவும்:
கல்வராயன் மலை

32) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறி. கரும்பு விளையும் பகுதி

*****************************************